இராமகாதை
கம்பன் கழகம் - திருப்பத்தூர். வ.ஆ.

கம்பன் விழா

4-ம் ஆண்டு மலர்
1980

கம்பன் கழகம்
திருப்பத்தூர், வ. ஆ.

கம்பன் விழா

★

நான்காம் ஆண்டு
மலர்


1980

★

கம்பன் கழகம்,

திருப்பத்தூர், வ. ஆ.

பொருளடக்கம்



முன்னுரை

ஆண்டுதோறும் சூலைத் திங்களில் கம்பன் விழா எடுப்பதை வழக்கப் படுத்திக் கொண்டோம்; இது நான்காவது ஆண்டு! கம்பன் விழாவில் மக்கள் ஆர்வத்தோடு வந்து கலந்துகொள்கின்றனர். விழா அரங்கில் முந்தியிருக்க விரும்பிப் பலர் இக்கழகத்தில் உறுப்பினராகச் சேர்ந்து எங்களுக்கு ஊக்கமளித்து வருகின்றனர்.

இராமாயணக் கதையைப் பல்லாண்டுகளாக நம் பாரத மக்கள் கேட்டுக் கேட்டு இன்புற்று வருகின்றனர்; அது கதையின் பெருமை! ஆனால் இந்த விழாவில் கூடும் மக்கள், கதையைக் கேட்பதற்காக வருவோர் அல்லர்; அக்கதையைக் கம்பன் சொல்லியுள்ள அழகைக்காண வருகின்றனர். அழகுணர்வும், இலக்கியச் சுவையும் அவர்களை ஈர்க்கின்றன; இது வளர்ச்சி. 'கம்பன் விழாக்கள் தமிழுக்கு ஆற்றிவரும் தொண்டின் பயன்' என்று இதனை அறிந்து போற்ற வேண்டும்.

கம்பனுடைய பேராற்றலை அறிஞர்கள் எடுத்து விளக்கும்போது நாம் அதனைக் கேட்டு வியந்து போற்றுகின்றோம்; சுவைத்து மகிழ்கின்றோம். ஆனால், அதனைக் கேட்போர் சிலர்; கேளாதார் பலர். கேளாதாரும் பயன்பெற வேண்டும் என்னும் நல்ல நோக்கத்ததுடன் இந்த மலரை வெளியிடுகின்றோம். தாளின் விலையும் பிறவும் மிக உயர்ந்துள்ள இந்த நாளில் மலரை வெளியிடுவது பெரு முயற்சியாகும். ஆயினும் இது நிலைத்து நின்று ஆற்றும் பயன் கருதி இம்முயற்சி யைக்கைவிடாமல் தொடர்கின்றோம்.

ஆழ் கடலில் மூழ்கி அறிஞர் எடுத்த முத்துகள் இம்மலர்க்கு அணி செய்கின்றன. மலரை நுகர்க! நுகர்ந்து இன்பம் பெறுக! பயன் விளைக!

வாழ்க தமிழ்! வளர்க கம்பன்!

கம்பன் கழகம்,
திருப்பத்தூர், வ. ஆ.

19-7-1980

கம்பன் கழகம், திருப்பத்தூர், வ. ஆ.

செயற் குழு :

தலைவர் : திரு. கா. அ. ச. பத்மநாபன்
துணைத் தலைவர் : ,, வி. ஆர். மாரிமுத்து செட்டியார்
செயலர் : ,, சு. சண்முகசுந்தரம்
துணைச் செயலர் : ,, சி. தண்டபாணி
பொருளாளர் . ,, கா. அ. ச. ரகுநாயகன்

உறுப்பினர்கள் :

செல்வி. துரை. இலக்குமி
திரு. டி. ஜி. விசுவநாதன்
,, எம். துரைசாமி
,, சி. கே. டி. திருநாராயணன்
,, டி. பி. தங்கவேலு
,, இரத்தின நடராசன்
,, ஒய். எஸ். ஞானப்பிரகாசம்
,, டி. பி. கோவிந்தராஜி
,, டி. டி. மார்கபந்து
,, கே. எஸ். பாலசுப்பிரமணியன்
,, எம். கார்த்திகேயன்
,, டி. கே. சந்திரசேகரன்
,, எஸ். பாலச்சந்திரன்
,, கே. வி. மாணிக்கவாசகன்

மலர்க்குழு :

திரு. வி. ஆர். மாரிமுத்து செட்டியார்
,, கே. ஏ. எஸ். பத்மநாபன்
,, கே. ஏ. எஸ். ரகுநாயகன்
,, எஸ். சண்முகசுந்தரம்
,, டி. பி. தங்கவேலு
,, சி. கே. டி. திருநாராயணன்
,, டி. கே. சந்திரசேகரன்
,, எம், கார்த்திகேயன்
,, கே. எஸ். பாலசுப்பிரமணியன்
,, கே. சி. கிருஷ்ணன்
,, வ. தீனதயாளன்

★

RAJ BHAVAN
MADRAS-600 022

18th June 1980.

MESSAGE

I am glad to know that 'Kamban Vizha' will be celebrated at Tirupathur on the 19th and 20th July 1980. Kamban is the supreme poet of Tamil Nadu and his Kamaba-ramayanam will live as long as the world lives. I am glad that various institutions in Tamil Nadu immortalize Kamban in a fitting manner from time to time. This is the best way of keeping Kamban ever green in our memory. I wish the festival every success.

(Sd.) *Prabhudas B. Patwari.*
Governor of Tamil Nadu

To
Thiru V.R.Marimuthu Chetty
Tirupattur, N. A.

Dr. Rajah
Sir Muthiah Chettiar
of Chettinad

Chettinad House, Adyar,
RAJAH ANNAMALAIPURAM P. O.
Madras - 28

18 - 6 - 1980

திருவாளர் வி. ஆர். மாரிமுத்து செட்டியாரவர்கள்,
கம்பன் கழகம்,
செட்டித் தெரு,
திருப்பத்தூர், (N. A. Dt.)

அன்புள்ள ஐயா,

19-7-80, 20-7-80 இவ்விரு நாள்களில் நடைபெறும் கம்பன் விழாவில் கலந்துகொண்டு மலர் வெளியீடு செய்யக் கோரியிருக்கும் தங்கள் அன்புள்ள 13-6-80 உ கடிதம் கிடைத்தது. மகிழ்ச்சி. இவ் விழாவினையொட்டி மலர் வெளியிட ஏற்பாடு செய்திருப்பதும் மிகவும் பொருத்தமாகும். 1977-ஆம் ஆண்டு முதல், வருடந்தோறும் தமிழ்ப் பெரியோர்களை வரவழைத்துச் சிறந்த முறையில் விழா நடத்தி வருவதும் போற்றத்தக்கதாகும். இவ்வருடம் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள், புலவர் கீரன் அவர்கள் போன்ற பல அறிஞர் களும், பேராசிரியர்களும் விழாவில் பங்கேற்கவிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். தங்கள் கழகம் 1977-ஆம் வருடம் முதல் இதுவரை மிகச் சிறந்த முறையில் தமிழ்த் தொண்டுசெய்து வருவதும் பெருமைக்குரியதாகும். சிறந்த சேவை செய்துவரும் தங்களையும் தங்கள் கழகத்தைச் சேர்ந்த தலைவர், துணைத்தலைவர், உறுப்பினர்கள், செயலர் அனைவரையும் மிகவும் பாராட்டுகின்றேன். தொடரட்டும் தங்கள் தமிழ்த் தொண்டு எனவும், மேலும் மேலும் சிறக்கட்டும் கம்பன் கழகம் எனவும் வாழ்த்துகின்றேன்.

தங்கள் அன்புள்ள,
(ஒ-ம்.) மு. அ. முத்தய்யா செட்டியார்.

அருந்தவத்து அரசி

கா. அ. ச. ரகுநாயகன், எம். ஏ.,

இராம காதையில் இராமன் சீதை இராவணன் போன்ற மிகப் பெரிய பாத்திரங்களும், கூனி தாடகை சூர்ப்பணகை போன்ற சிறிய பாத்திரங்களும் விரவி வந்துள்ளன. ஆனால் சபரி போன்ற மிகச் சிறிய பாத்திரம் வேறு இல்லை என்று கூறலாம். சபரி தோன்றும் காட்சி சிறியது. காவியப் போக்கிற்கு அவள் செய்யும் துணையும் சிறியதே. ஆயினும் அப்பாத்திரம் மிக விழுமியதாக அமைந்து உள்ளது.

இராமன் கவந்தனைக் கொன்று அவனுக்கு நல்லுலகம் அளிக்கின்றான். அப்போது இராமனைப் பரம்பொருள் என்று உணர்ந்த அவன் துதி செய்கிறான்; பின்னர் சீதா பிராட்டியைத் தேடுவதற்கான சில ஆலோசனைகளை இராமனிடம் கூறுகிறான். அப்படி அவன் சொல்வதில் சுக்கிரீவனைத் துணை கொள்ள வேண்டும் என்பதும், சுக்கிரீவன் தங்கியுள்ள உருசியமுக மலைக்குச் செல்லும் வழியைச் சபரியைக் கேட்டறிய வேண்டும் என்பதும் கதைப் போக்கிற்குத் துணை செய்வன.

" தாயினும் உயிர்க்கு நல்கும் சவரியைத் தலைப்பட் டன்னாள்
ஏயதோர் நெறியை எய்தி இரலையங் குன்றம் ஏறி "

என்று கவந்தன் சபரியை அறிமுகப்படுத்துகிறான். 'தாயினும் உயிர்க்கு நல்கும் சபரி' என்னும் அவன் கூற்றினால், எடுத்த எடுப்பிலேயே அப்பாத்திரம் உயர்ந்து சென்று ஒளி வீசுகிறது.

கவந்தன் வானில் மறைந்த பின்னர் இராம லட்சுமணர்கள் சபரியை நாடிச் சென்று மதங்க முனிவர் ஆசிரமத்தை அடைகின்றனர். சபரி ஒரு பெண் துறவியாக அங்கு இருந்து வருகிறாள்; அங்குள்ள மாணவர்க்குத் தாய்போல் இன்சொல் கூறி அந்தச் சூழலை இன்பமயமாக்குகிறாள். இவள் ஒரு தவயோகி.

சபரி ஒரு முதாட்டியாக அறிமுகம் ஆகின்றாள். அவளுடைய பிறப்பு வளர்ப்பு முதலான செய்திகளை ஆசிரியர் கூறவில்லை. இவள் வேட்டுவர் குலத்தைச் சேர்ந்தவள் என அறிகின்றோம். தேன் கொண்டுவந்து விற்றல் இவள் குலத்தார் தொழில். இவர்களைச் சபரர் என்று அழைப்பது வழக்கு. 'சபரன்' என்னும் ஆண்பால் பெயர்க்குப் பெண்பால் சபரி. எனவே, சபரி என்பது இவளுடைய இயற்பெயர் அன்று.

பன்னெடுங்காலமாக இவள் மதங்க முனிவரின் ஆசிரமத்தில் இருப்பவள்; காடுகளில் கிடைக்கும் காய் கனி கிழங்குகளை உண்டு யோகம் செய்து வருகிறாள்.

இந்த ஆசிரமத்துக்கு வரும் பிரமன், ஈசன், இந்திரன் முதலானோர் இம்முதாட்டியைக் கண்டு, இவளுடைய தவ வலிமையைப் போற்றி வியந்து தம்தம் உலகுக்கு வருமாறு அழைப்பு விடுத்துச் செல்கின்றனர். ஆனால் அவைகள் போகபூமிகளே ஆனதால், அங்குச் செல்லும் எண்ணம் இவளுக்கு இல்லை. தவிர, இவள் இராமனுடைய வரவை எதிர்நோக்கித் தவம் செய்துகொண்டிருப்பவள். ஆதலின் அவர்களுடைய வேண்டுகோளை இவள் ஏற்கவில்லை.

"... ... ... ஆண்டுநின் றளவில் காலம்
தன்னையே நினைந்து நோற்கும் சபரி ... ..."

என வரும் அடிகளில் இவள் இராமனையே நினைந்து எதிர்பார்த்திருப்பதை அறியலாம்.

சபரியைக் கண்டு இராமன் இனிய சொற்களால் அவளுடைய நலனை வினவுகிறான். "இங்கு உனக்கு ஊறு ஒன்றும் இல்லையே?" என்பது அவன் கூறும் மொழி. சபரி வாழும் அந்த இடம் அடர்ந்த காடாக இருப்பதால், விலங்குகளால் துன்பம் ஏற்படக்கூடும்; அன்றியும் தவம் செய்வோர்க்கு அரக்கர்களால் ஏற்படும் இடையூறும் உண்டு. எனவே இராமன் உள்ளத்தில் இயற்கையாக இந்த வினா எழுகிறது.

இப்படிக் கேட்டவன் யார்? இராமன். ஆம்; அவன்தான் எல்லாப் பொருளுக்கும் மூலமான முதற்பொருள். இந்தக் கருத்தைக் கம்பர் கூறும் வண்ணம் காண்போம்.

"முன்னிவற் கிதுவென் றெண்ண லாவதோர் மூலமில்லான்"

என்பது அவர் வாக்கு. ஆதிமூலமான பொருளை நோக்கிச் சபரி அளவில் காலம் தவம் செய்துகொண்டிருந்தாள் என்பதனை இவ்வாறு அவர் விளக்குகிறார்.

இராமனுக்குத் தான் ஓர் அவதாரம் என்ற நினைப்பு இல்லை. அவனைப் பரம்பொருள் என்று உணர்ந்த மாந்தர் காப்பியத்துக்குள் ஒரு சிலரே. அவர்களுள் சபரி ஒருத்தி. இராமனை நேரில் காண்பதற்குப் பல காலம் முன்னரே அவளுக்கு அந்த உணர்வு ஏற்பட்டு இருந்தது.

இராமனை நேரில் கண்டபோது சபரி மகிழ்ச்சிக் கடலில் திளைத்தாள்; கண்ணீர் பெருக்கினாள். "அய்யனே! இன்று உன்னைக் கண்டதும் என் பாசம் நீங்கிவிட்டது. என் தவத்தின் பயனைப்

பெற்றேன்; என் பிறப்பு நீங்கியது" என்று கூறுகிருள்; அவனுக்கு விருந்தளிக்க முற்படுகிருள்.

கானகத்தில் விருந்து என்ருல் காய் கனி கிழங்குகள்தாம் கிடைக்கும். அவற்றுள் தக்கனவற்றைத் தன் பட்டறிவால் தேர்ந்தெடுத்து இராமலட்சுமணர்க்குச் சபரி படைக்கின்ருள். எல்லாம் இன்சுவை பயப்பன; தீமையற்றன. அந்த ஆசிரமம் ஒரு சோலையின் நடுவே உள்ளது. சோலையில் எல்லா வகையான கனிமரங்களும் உள்ளன. எதனை வேண்டினும் அங்குப் பெறலாம். எல்லாம் கற்பகத் தருக்கள் போன்றன. இராமன் அங்கு வரப்போகிருன் என்பதை எதிர்நோக்கியிருந்த சபரி சோலையில் உள்ள இனிய நல்ல கனிகளைப் பறித்து வைத்திருந்தாள். இனியவை கூறிய இராமனுக்கு நல்ல கனிவகை விருந்தயர்ந்தாள் சபரி.

கனி வகைகளை மன நிறைவோடு உண்ட இராமன், "அன்னையே! வழி நடந்துவந்த எங்கள் துன்பமெல்லாம் நீ உன் அன்பான செயலாலே தீர்த்தாய்; நீ வாழ்க!" என்று சபரியிடம் கூறுகிருன். 'வருந்துறு துயரம் தீர்த்தாய்; அம்மனை மொழி' என்று இராமன் சொல்லும் வார்த்தைகளில் வழிநடைத் துன்பத்தை மட்டும் அல்லாமல் வேறு எதனையோ உட்கொண்டிருக்கும குறிப்புத் தெரிகிறது. அவன் உள்ளத்தில் மண்டிக் கிடக்கும் துயரம் தேவியைப் பிரிந்திருப்பதே ஆகும். தேவியைத் தேடும் முயற்சியில் இந்த முதியோள் சொல்லவிருக்கும் வழியும் ஒரு பேருதவியாகும்.

"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்"

என்னும் அறத்துக்கிணங்க இராமன் சபரியின் உதவியைப் பெரிதாக எண்ணிப் போற்றுகிருன். இராமனைப் பரம்பொருள் என உணர்ந்த சபரி அவனை "எந்தை!" என்று கூறி விளிப்பதும், இராமன் சபரியை "அம்மனை" என்று விளிப்பதும் உணர்ந்து, அந்த உயர்ந்த ஒழுக்க நெறிகளை நாம் போற்ற வேண்டும்.

சுக்கிரீவன் தங்கியுள்ள உருசியமுக மலைக்குச் செல்லும் நீண்ட வழியைச் சபரி இராமனிடம் விளக்கமாகக் கூறுகிருள். அது எளிய வழி அன்று; ஆகவே அதனை நன்ருகத் தன் மனத்தில் எண்ணிப் பார்த்து அவள் கூறுகின்ருள்.

உருசியமுக மலைக்குச் செல்லும் வழியைக் கவந்தன் கூறுவதாக வான்மீகத்தில் அமைந்துள்ளது. அதனைக் கம்பர் மாற்றியுள்ளார். வான்மீகி கூறியுள்ளபடி காவியப் போக்கு இருக்குமாயின் இந்தச் சபரி என்னும் பாத்திரம் ஒரு பயனற்ற பாத்திரமாகவே அமையும். தவிரவும் அடர்ந்த காட்டினுள் செல்லும் அரிய வழிகளை அக்காட்டி

ளுள் வாழ்பவரே நன்கு அறியக்கூடும். கவந்தன் ஓர் அரக்கன். அவன் வானில் பறந்து செல்லும் இயல்புடையவன். அவன் கானகத்தின் வழிகளைச் சபரிபோல் பலமுறை நடந்து கூர்ந்து அறியும் வாய்ப்பு இல்லாதவன். நடைவழி கொண்ட இராமலட்சுமணர்க்குச் சபரி வழி கூறுவதே பொருத்தமாகும். எனவே, கம்பர் செய்த மாற்றம் மிகப் பொருத்தமாக இருப்பதைக் காண்கிறோம்.

சபரி கூறும் காட்டு வழிகளையெல்லாம் இராமன் நுட்பமாகக் கேட்டறிந்தான் என்று சொல்லும் கம்பர் பாடல் மிகச் சிறந்த பாடல்களில் ஒன்றாக வைக்கத்தக்கதாகும்.

கான் நெறி காட்டும் சபரிக்கு வான் நெறி காட்டும் நல்லறிஞரை உவமை கூறுகிறார் ஆசிரியர். வீடு பேற்றை அடைவதற்கான சீரிய வழிகளைத் தெளிவாகக் கேட்போர்க்கு நன்கு விளங்குமாறு சொல்ல-வல்ல நல்லாசிரியனைப் போலச் சபரி காட்டு வழிகளையெல்லாம் விளக்கமாகச் சொல்கிறாள். 'அவள் சொல்வதையெல்லாம் இந்த இராமன் ஒன்றுவிடாமல் கேட்டுக்கொண்டிருந்தான் என்று சொல்கிறார்களே! யார் இந்த இராமன்? இவன் பரம்பொருளே அன்றோ?' என்று வியக்கின்றார் கம்பர்.

செவிக்கு ஒரு பெருமை உண்டு. ஓசைகளைக் கேட்கும் புலனுடைய செவிகள் எல்லாம் செவிகள்தாம். ஆனால், அவைகளுக்குப் பெருமையில்லை. பெரியோர்கள் சொல்லும் அரிய பொருள்களையெல்லாம் கேட்டுக் கேட்டு அந்தச் செவி துளைபட்டிருக்கவேண்டும்; அந்தப் புலன் பண்பட்டிருக்க வேண்டும். அப்படிப்பட்ட செவிகளை உடைமையே பெருமையாகும். அத்தகைய செவிகளைப் பெற்றோர் தம் பண்பட்ட உணர்வினால் பெரியோர்களின் அருள்மொழிகளை அமுதமாக உண்பர். அந்த அமுதத்தின் சுவையாய் நிற்பவன் பரம்பொருள். அரிய பொருள்களைச் சொல்வோரும் கேட்போரும் அன்றி, அப்பொருளின் சுவையாகவும் இருப்பவன் பரம்பொருள். அந்தப் பரம்பொருள்தானே இங்கு இராமனாகக் காட்சி அளிப்பது என்று எண்ணிய கம்பருக்கு வியப்புத் தோன்றுகிறது. அவர் பாடுகிறார்:

"வீட்டினுக் கமைவ தான மெய்ந்நெறி வெளியிற் றாகக்
காட்டுறும் அறிஞர் என்ன அன்னவள் கழறிற் றெல்லாம்
கேட்டனன் என்ப மன்னோ கேள்வியால் செவிகள் முற்றும்
தோட்டவர் உணர்வின் உண்ணும் அமுதத்தின் சுவையாய்
நின்றான்."

இராம லட்சுமணர்க்கு விருந்து செய்து மகிழ வேண்டும் என்று காத்திருந்த சபரி, அவ்வாறு விருந்து செய்த பின்னர் தன் யோகத்தின் வலிமையினால் தன் உடலைத் துறந்து வீடுபேற்றை இனிது

பெற்றாள். அவளுக்கு வீடுபேறு அளித்தவன் இராமன். இராமனைக் காணும் அளவும் அவள் உயிர் உடலைப் பொருந்தி நின்றதும், அவள் விரும்பியபோது அது பிரிந்து சென்றதும் சபரி செய்து வந்த யோகத்தின் வலிமையினால் என்பது அறியத் தக்கதாகும்.

சபரி என்னும் அந்த மூதாட்டி இவ்வாறு இராம லட்சுமணர்கள் காணுமாறு உடலைத் துறந்து சென்ற காட்சி அவர்களை வியப்பில் ஆழ்த்தியது. பின் இருவரும் சபரி கூறிய காட்டு வழியில், காடு மலை திசைகளையெல்லாம் கடந்து சென்று பம்பை என்னும் பொய்கையை அடைகின்றார்கள். இந்தச் சிறிய வரலாற்றைக் கம்பர் பெருமான் ஒன்பது பாடல்களில் ஒரு படலமாக இனிது அமைத்துள்ளார். சபரி என்னும் ஒரு சிறிய பாத்திரத்தைக் காப்பியத்துக்குப் பயனுள்ள பாத்திரமாகவும், விழுமிய பாத்திரமாகவும் மாற்றுயரச் செய்தது கம்பரின் கைவண்ணமே என்பதை அறிந்து மகிழவேண்டும்.

உ

ஸ்ரீ முருகன் துணை.

திருப்பத்தூர் கம்பன் கழகத்திற்கு நல்வாழ்த்துக்கள்!



C. குப்புசாமி செட்டியார் சன்ஸ், திருப்பத்தூர்.

D. திருநாராயணன் D. முரளிதரன்

G. ஜனார்த்தனன் G. ஜகந்நாதன்


G. பக்தவத்சலம்

Phone No. 37

உ

ஸ்ரீ வெங்கடாசலபதி துணை

4-ம் ஆண்டு கம்பன் விழாவிற்கு நல்வாழ்த்துக்கள் !



D. திருநாராயணன் & பிரதர்ஸ்,

G. பக்தவத்சலம் T. மணிவண்ணன்

திருப்பத்தூர், வ. ஆ. போன் : 370



கல்வித் தமிழில் காவியம் யாத்த கம்பன்தன் பெருவிழாவிற்கு
எங்கள் நல்வாழ்த்துக்கள் !



V. ரங்கசாமி செட்டியார் சன்ஸ்

மண்டி,

திருப்பத்தூர், வ. ஆ.

தந்தி : ஆனஸ்டி P. B. 25 போன் : 24



THE ORDEALS OF SITA

By *M. Doraiswamy*, B. A.,

Sita, wife of Sri Rama, is the highest creation of Valmiki and in Kambar's Ramayana she becomes still greater and more virtuous. She is the personification of all good virtues such as beauty, bravery, compassion and the capacity to bear the unbearable sorrow with unparalled patience and equanimity. The greatest Indian woman is Sita and Indian womanhood reached its peak of excellence in her.

Swami Vivekananda says thus, "She is the very type of a true Indian woman. There she will always be the glorious Sita, purer than purity itself, all patience and all suffering. She who suffered that life of suffering without a murmur, she the ever-chaste and ever-pure wife, she the ideal of the people, the ideal of the Gods, the great Sita our national God She must always remain. Sita has gone with the very vitals of our race." Rt. Hon'ble Srinivasa Sastri says that a woman like Sita did not live before her and will not be born hereafter. Daughter of a great Saintly King Janaka, daughter-in-law of a still greater King Dasaratha and wife of the greatest warrior King Rama, Sita was destined to be born for sorrow and to live with sorrow suffering from the greatest ordeals and untold miseries.

By the machinations of Kaikeyi, Rama not only loses the throne, but is being sent to the forests for fourteen long

years. Sita's chapter of woe begins right from now, because she too accompanies an unwilling Rama. In Chitrakootam, Rama shows to Sita the beauties of Nature and Kambar's description runs into thirty six verses of fine surpassing beauty. Natural beauty is immortalised in these fine verses. In one of these verses, Rama addresses Sita as thus "சீலம் இன்னது என்று அருந்ததிக்கு அருளிய திருவே" which means "Thou, who had taught what chastity is to Arunthathi." Arunthathi herself is an example for spotless chastity and Kambar says that Arunthathi herself had learnt lessons from Sita about chastity. This epithet of Rama is important, for, Rama himself in a later stage accuses Sita of unchastity.

Ten long years of stay in Dandakaranya pass off peacefully and it could be gussed that Rama and Sita had a nice time, during this period. But, when they leave for Panchavadi on the banks of Godavari, trouble begins to enter the life of Sita.

Surpanaga, the sister of Ravana happens to see Rama, the beauty-incarnate and becomes highly infatuated with love and lust for him. Rama summarily rejects her love and subsequently Lakshmana chops off her nose and breast when she tried to abduct Sita. Karan, Thirusilan and Dhoodanan all who come in support of Surpanaga are killed and the disappointed and enraged Surpanaga vows to wreak vengeance on Sita and Rama. Thus, the bad days of Sita begin with the arrival of Surpanaga on the scene.

An inscrutable fate drags Surpanaga into the vicinity of Rama and Sita and spins a most complex story, the tragedy of Sita. The debt of Rudra must be paid and the Lord of destruction is to be appeased only by the instrument of Surpanaga. If Surpanaga had not informed Ravana about Rama and Sita, no abduction could have taken place and no war. But, the destruction on an enormous scale was planned and put into execution through the medium of Surpanaga.

Greatly strung by love and lust for Sita, Ravana abducts Sita in the absence of Rama and his brother and

imprisons her in the Asoka Vana in Lanka amidst demonnesses of a poisonous nature.

" நஞ்சு இயல் அரக்கியர் நடுவண் ஆயிடை
சிஞ்சுப வனத்திடைச் சிறைவைத்தான் ... ... "

Rama's sorrow and great anguish and agony when Sita was missing are well portrayed by Kambar as follows :

" நின்று பல்உயிர் காத்தற்கு நேர்ந்தயான்
என் துணைக் குலமங்கை ஓர் ஏந்திழை
தன் துயர்க்குத் தகவு இலென் ஆயினேன்
நன்று நன்று, என்வலி " என நாணுமால்

(ஆரணிய காண்டம் —

" I who had saved so many lives have not gone to wipe out the distress of my own wife. How useless is my bodily strength !" So saying Rama felt ashamed of himself.

In the Asoka Vana Ravana makes advance of love to Sita eulogising her beauty and the great fortune she would get if she becomes his wife. He is maddened with love for Sita and presents himself as a pitiable creature fully devoured by lust. Finally, Ravana the great, throwing away his power and prestige, raising both of his hands over his crown fell prostrate at the feet of Sita saying thus :

" குடிமை மூன்று உலகு செயும் கொற்றத்துஎன்
அடிமை கோடி, அருளிதியால் எனு
முடியின் மீது முகிழ்த்து உயர் கையினன்
படியின்மேல் விழுந்தான் பழி பார்க்கலான் "

(சுந்தரகாண்டம்—காட்சிப் படலம் 114)

" Take me, who is the ruler of the three worlds as your slave and show your grace." But Sita enraged by his unlawful words and behaviour admonishes and curses him that the mighty Rama would come and completely wipe out Ravana and his entire Lanka.

" ஆழியும் இலங்கையும் அழியத் தாழுமோ ?
ஊழியும் திரியும் உன் உயிரோடு ஓயுமோ ?"

(சுந்தர காண்டம்—காட்சிப் படலம் 124)

But, Sita always immersed in the memory of Rama sometimes hopes firmly that her husband Rama would surely arrive one day to release her.

"வாராது ஒழியான் எனும் வண்மையினால்
ஓர் ஆயிர கோடி இடர்க்கு உடையேன்
தீராய் ஒருநாள் வலி — சேவகனே !
நாராயணனே ! தனி நாயகனே !"
(சுந்தரகாண்டம்—உருக்காட்டு படலம் 6)

" I bear patiently a thousand crore of ills and misfortunes in the fond hope that my husband would certainly come to release me. Oh ! Narayana ! Oh peerless Lord ! Extricate me one day from this hell."

But, sometimes sorrow would supress her to that great extent when she would think of putting an end to her life itself. Sometimes she would be assailed by all sorts of doubts about her reclamation by Rama.

"அற்புதன் அரக்கர்தம் வருக்கம் ஆசு அற
வில் பணிகொண்டு, அருஞ்சிறை மீட்டநாள்
"இல்புகத் தக்கலை" என்னில் யானுடைக்
கற்பினை, எப்பரிசு இழைத்துக் காட்டுகேன் ?"
(சுந்தரகாண்டம்—உருக்காட்டு படலம் 19)

When the rarest gem Rama vanquishes the entire Rakshasas and releases me and confronts me with the question " You are unfit to enter my house ", how can I prove my chastity which I have guarded so carefully ?"

So, even in captivity there lurks in the mind of Sita a doubt whether her chastity would be doubted however chaste she might be.

After Ravana was killed, Rama sends for Sita and when she arrives, Rama's behaviour takes an unexpected and sharp turn and he looks at Sita like an enraged cobra and begins to utter words that are tantalizing and agonising. In the Original Valmiki's, there are many verses depicting Rama's wrath ; but Kambar confines himself only to seven stanzas and that too he takes away most of the venom that we find in the Original Valmiki's.

" ஊண்திறம் உவந்தனை ; ஒழுக்கம் பாழ்பட
மாண்டிலை ; முறைதிறம்பு அரக்கன் மாநகர்
ஆண்டுஉறைந்து அடங்கினை ; அச்சம் தீர்ந்துஇவண்
மீண்டதுஎன் நினைவு ?' எனை விரும்பும் " என்பதோ ?
(யுத்த காண்டம்—மீட்சிப் படலம் 62)

" You have lived in Ravana's place under his control. There you have taken delicious foods with great pleasure. After having spoiled your good character you have not thought of dying which you should have done. You have come back again without any sense of guilt and fear in the hope that I will take you back."

These words are harsh. But, in the next stanza still harsher words comeforth.

" உன்னைமீட் பான்பொருட்டு, உவரி தூர்த்துஒளிர்
மின்னைமீட் டுறுபடை அரக்கர் வேர்அற,
பின்னைமீட் டுறுபகை கடந்தி லேன்பிழை
என்னைமீட் பான்பொருட்டு இலங்கை எய்தினேன் "
(யுத்த காண்டம்-- மீட்சிப் படலம் 63)

" I have not built a bridge and crossed over to Lanka and annihilated the demons and Ravana simply to get you released from captivity. I have come to Lanka to rescue myself and my honour from the blot that I have not killed my enemy who had abducted my wife."

Still further, Rama accuses Sita of having eaten the flesh of animals with avidity and of having drunk toddy and other drunks. He asks her whether she had come back to familiarise them with these unholy foods. He accuses her that the great assets of woman like high birth, chastity and truthfulness have been tarnished by her. Good women, he says, would not obey their five senses and go with them. They would not adorn their heads when they were separated from their husbands ; but would have austere lives. Moreover those good women would commit suicide if any harm attacks their chastity.

Finally, he observes that her unchastity pierced his heart and broke him. As such, she should die herself or else go anywhere she likes. With these unkind words, Rama dissociates himself completely from Sita.

One can better imagine the plight and utter helpless state of mind of Sita at this juncture. He who had praised Sita in Chitrakootam as,

" சீலம் இன்னது என்று அருந்ததிக்கு அருளிய திருவே !"

completely reverses his own statement and utter words that pierce our ears like poisoned arrows.

To me, the ordeals. travails and tribulations that Sita went through for ten long months in the enemy's camp Asoka Vana appear very small and insignificant when compared with the plight Sita was placed on hearing Rama's uncharitable and undeserving accusations. Rama had heard already from the mouth of Hanuman sufficiently of her chaste life and unceasing devotion to Rama. The very first word that comes out from Hanuman is " கண்டனன் கற்பினுக்கு அணியை கண்களால்." "I have seen with my own eyes the perfection of chastity in Sita "

Further Hanuman says.

" கண்ணின் உள்உளாநீ ; தையல் கருத்திலும் உளாநீ "
(சுந்தர காண்டம்— திருவடி தொழுத படலம் 30)

" She always sees you only and thinks only of you alone." He even informs Rama about the visit of Ravana to Sita and how she vehemently dismissed his love for which act he even tried to kill her.

Hanuman gives a graphic account of the life of Sita in the Asoka Vana. From this nobody could have come to any bad opinion about Sita. If Rama had not known the conditions under which she lived in Ravana's place, it might have given room for any suspicion. But, he fully knows everything through Hanuman. It is quite curious and astonishing to find Rama flaring up suddenly against Sita.

Kambar had changed the original Valmiki with regard to the lifting of Sita from the forest hermitage in that while Valmiki says that Sita was taken away on his own person, Kambar modifies it by saying that Ravana did not touch her but lifted the very earth upon which she stood. Here too Kambar ignores the harshest words that Valmiki

employs. In Valmiki, Rama disowns Sita and asks her to choose any of the four, Lakshmana, Bharatha, Sugriva and Vibishana ; and asks her to take her own course. Ravana, he says, was not likely to have left such beauty as her unsullied."

Rt. Hon. Srinivasa Sastriar is astonished at the wide freedom that Rama gives to Sita in choosing. Pious commentators read a different meaning in these lines and comment that Rama asked Sita to get protection from any of these. But Sastri believes that Rama would have said like that like any other enraged person would. Kambar, who has refrained from narrating the incidents of Uthara-kanda and further ordeals of Sita has abridged the original to a great extent. Obviously his devotion to Rama forbids him to do that.

In deep anguish and sorrow, Sita enters the fire, lit by Lakshmana and comes out unscathed proving her spotless chastity. Agni, the God of fire, sprang up from the blaze with Sita in his hands and proclaimed to the world that she was chaste and pure and knew no sin. He requests Rama to take her back without hesitation.

To me, it appears that Rama, the God that he is, tries to teach to the world, that wife, son and kingdom are all illusions and transitory. Our relationship with these must be unattached and our view must be equal to one and all. He who had put forth all his efforts to fight and conquer Ravana with the sole object of winning back his dear wife, in one instant after he had accomplished that feat gives up that wife disowning her completely. This unattached bent of mind is the highest state which will release man from bondage and shackles of all kinds. Attachment to one's own kith and kin, property etc., are all illusions. Only in that view could Rama's conduct could be seen and justified.

மந்தரை - ஒரு திறனாய்வு

சு. சண்முகசுந்தரம், எம். ஏ., பி. டி.,

அறநெறி வழுவாமல் முறைசெய்து செங்கோல் ஓச்சி, மக்கள் மகிழ்ச்சியுடன் சுபிட்சமாக வாழும் வகையில் நீண்ட நெடுநாள்கள் ஆண்டு அனுபவித்த தயரத மன்னன் அரச பாரத்தை அருந்தவச் செல்வன் இராமனிடம் ஒப்படைக்க முடிவு செய்தான். அமைச்சர் பேரவையைக் கூட்டி ஆலோசனை மேற்கொண்டு தன் முடிவினுக்கு முழு ஒப்புதல் பெற்ற மன்னர் மன்னன் தயரதன், முடிசூட்டு விழாவுக்கு நாள் குறித்து முரசறைந்து மக்களுக்கு அறிவிப்புக் கொடுத்து அவர்களை மகிழச் செய்தான்.

நகரெங்கிலும் ஆரவாரம்; மகிழ்ச்சித் தாண்டவம்! வீதிகள் அனைத்திலும் தோரணங்கள்; மாடங்களில் வண்ணக் கொடிகள்! பூ மழை பொழிந்தாற்போல் வீடுகளின் முன்புறம் அலங்காரங்கள் பெற்றன. தேவலோகமே பூலோகத்திற்குப் பெயர்ந்து வந்ததுபோல அயோத்தி மாநகரம் அழகு பொலிந்து விளங்கிற்று.

மந்தரையின் மனத்தில் மட்டும் மகிழ்ச்சி இல்லை. அவள் மிக்க சினம் கொண்டாள்; உள்ளத்தில் உளைச்சலை வளர்த்துக்கொண்டாள்; கண்களில் எரியைச் சொரியலானாள்.

இராமபிரான் பிள்ளைப் பருவத்தில் விளையாட்டாகத் தன்மீது எறிந்த மண் உருண்டை விளைத்த செயலை, மனத்தில் அவள் பல முறை எண்ணினாள்; ஒரு முடிவுக்கு வந்தாள்.

கைகேயியின் அரண்மனையை அடைந்தாள். கொடிய விடமே உருவாய்க் கொண்ட இராகு என்னும் கோள் தன்னைத் தீண்டும் வரை ஒளியினை உமிழும் குளிர்ச்சியான சந்திரனைப்போல், பெருந்துன்பம் தன்னை நெருங்குவதை உணராமல் உறங்கிக்கொண்டிருந்த கைகேயியை எழுப்பி இடித்துரைத்தாள்.

கையில் வில்லேந்தி அறம் பிறழாமல் விளங்கும் மக்களைப் பெற்ற தன் போன்றோர்க்குத் துன்பம் என்பது வருவதில்லை என்றும், வேதநாயகனான இராமனை மகனாகக் கொண்டுள்ள தனக்குத் துன்பம் வராது என்றும் கைகேயி கூறினாள்.

தன் எண்ணம் நிறைவேறாத போக்கினைக் கைகேயியிடம் கண்ட மந்தரை, பரதன் பெருவாழ்வு பெறாமல் பிறரால் பழிக்கப்பட்டு அழுந்திக்கிடக்கவும், இராமன் மன்னர்மன்னனாய்ப் புகழுடன் வாழ்வு பெறவும் வாய்ப்பு ஏற்பட்டதைச் சுட்டிக்காட்டி அவளுக்கு எச்சரிக்கை செய்தாள்.

கைகேயி, மந்தரையின் மனத்தைப் புரிந்துகொள்ளாமல், அவள் கூறிய செய்திக்கு மகிழ்ந்து, தனக்கு நற்செய்தியைத் தாங்கி வந்தவளுக்கு, ஒளியினை வெளிப்படுத்தும் ஒப்பற்ற முத்துமாலை ஒன்றினைப் பரிசாகக் கொடுத்து மகிழ்ந்தாள்.

மந்தரை மதிப்புயர்ந்த அந்த முத்துமாலையை நிலத்தில் வீசி யெறிந்தாள். முத்துக்களெல்லாம் சிதறின. அவள் கண்ணீரைச் சொரிந்தாள்; பெருமூச்சு விட்டாள்; தரையில் வீழ்ந்து அழத் தொடங்கினாள்.

பித்தம் ஏறிய தாய்போலப் பெருந்துன்பத்தைப் பரதனுடன் சேர்ந்துபடுமாறும், தானும் இனிமேல் கோசலையின் தாதியர்க்கு அடி பணிந்து கிடக்க நேர்ந்துவிட்டதாகவும் புலம்பினாள்; சிவந்த வாய் சீதைக்கும், சீதையின் கேள்வனான இராமனுக்கும் வாழ்வும், பரதனுக்கு மட்டும் தாழ்வும் உண்டாகிவிட்டதாகக் கூறினாள்; கோசலையின் பேராற்றலும், கைகேயியின் ஆற்றல் இன்மையுமே இந்த நிலைக்குக் காரணம் என்றாள். 'பரதன் கைகேயியைத் தாயாகப் பெற்றமையால் அரசாளும் வாய்ப்பை அவன் இழந்தான்' என்று ஊரவர் பழிச்சொல் கூறுவர் என்றும், அதைவிட அவன் நகரை விட்டு நீங்கித் துறவுமேற்கொண்டு தவத்தொழில் புரியலாம் என்றும் இடித்துரைத்தாள். அரச குடும்பத்தில் பிறந்து வளர்ந்து பேரரசி யாக விளங்கும் கைகேயியின் மைந்தன் பரதனுக்கு இழிநிலை வரலாகாது என்றும், அவனது இளமை, ஆற்றல், வீரம், அழகு எல்லாம் பாழாகலாகாது என்றும் கூறினாள்.

கைகேயி சினங்கொண்டாள். காய் கனல் தலையின்மீது நெய் சொரிந்தாற்போல் மனம் வெந்து நொந்தாள்; மந்தரையைக் கொடியவள் என்றும், முன்செய்த தீவினையால் நல்லனவற்றைக் கூறுதொழிந்தவள் என்றும், நீதிக்குப் புறம்பானவற்றையும் நெறி யற்ற முறைகேட்டினையும் தரவல்ல சொற்களைக் கூறிய அறிவிலாள் என்றும் வைதாள். அவள் நாவினைச் சேதியாமல் மன்னித்து விடுவ தாகவும், அவள் மேலும் பேசினால் அது நடந்துவிடும் என்றும் எச்சரித்தாள்...

— கைகேயியின் நேர்மையையும், அறம் திறம்பாத சான் றாண்மையையும் உணர்தற்கு இதுவே ஏற்ற இடம் எனலாம்.

தன்மீது வீசிய கொடிய சொற்களைக் கேட்டுச் சிறிதும் அஞ்சி அகலாத கூனி, கைகேயியின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினாள்.

"வயதில் மூத்தவர்க்கே அரசக்கட்டில் என்றால், தயரதன் தானே யாவரினும் மூத்தவன்? அவனிருக்கும்போது அவன் மைந்தனான இராமன் முடி சூட்டிக் கொள்வது என்ன நியதி? ...... அருளுடைய ஆன்றோரும், பெறலருந்திருவைப் பெற்றபின் மனம்

மாறுவர்; இது இயற்கை. அதனால் பரதன்மேல் இராமன் கொண்டுள்ள அன்பும் மாறும். கோசலையின் மைந்தன் அரசுகட்டில் ஏறினால், உலகமெல்லாம் அவனை மட்டுமே போற்றி வழிபடும். நீ வறுமையால் பீடிக்கப்பட்டு, உன்பால் வரும் விருந்தினர்க்கும் உபசரிப்புச் செய்ய இயலாத இழிநிலையடைவாய்; உன் உற்ற தாய்தந்தையர் இங்கு வருகை புரிந்தாலும், உரிமையுடன் அவர்களை வரவேற்க முடியாமல், அதற்கும் கோசலையின் தயவை எதிர்பார்த்து நிற்பாய். கேகய நாட்டை இனி சீதையின் தந்தை சனகன் கைப்பற்றுவான். சனகனுடன் இராமன் இணைவான்.— அப்போது நீ எங்ஙனம் வாழ்வாய்? எவர் துணை நாடுவாய்? துயர்க்கடலில் வீழ்ந்து அழிவாய்; பரதனின் வழித்தோன்றலுக்கே கேடு சூழ்வாய்.''

தூய சிந்தையள் ஆன கைகேயியின் உள்ளம் மந்தரையின் சூழ்ச்சித் திறனால் திரிந்தது.

அவள் மாறிவிட்டாள்.

இராமனின் முடிசூட்டு விழாவைத் தடை செய்ய அவள் துணிந்தாள். அவள் உள்ளத்தில் இரு வரம் என்னும் விதை விதைக்கப்பட்டது. அதற்கு வஞ்சனை என்னும் உரம் ஊட்டப்பட்டது - நஞ்செனும் பயிர் வளர்ந்தது.

— இந்த விளைவுக்குக் காரணம் மந்தரையா?

'ஆம்' எனில், அவள் ஏன் அந்த நிலைக்கு ஆளானாள்?

இராமனின் சிறுவயதுக் குறும்புதான் அதற்குக் காரணமா?

— இதற்கான காரணத்தைக் கம்பர் வேறுபடுத்திக் கூறுகிறார்; நுட்பமாய், அழகாய்க் கூறுகிறார்.

"இமையவர் தம் துன்பம் நீங்கும் பொருட்டுத் தவங்கிடந்து பெற்ற வரத்தின் நிலைபெற்ற தன்மையாலும், எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகும் அறவோராகிய அந்தணர் நாளும் செய்த தவ வலிமையாலும், அரக்கர்கள் செய்துவந்த பழி பாவங்களுக்கு இறுதிக் கட்டம் நெருங்கியதாலும், நாடு வாழ நல்லோர் பலரும் ஆற்றிவரும் அறநெறியின் பெரும் பயனாலும் தேவியாம் கைகேயியின் தூய சிந்தை திரிந்தது" என்கிறார் கம்பர்.

வானவர்க்கும் அந்தணர்க்கும் நன்மை விளையவும் அரக்கர் அழியவும் இராமபிரான் அவதரித்தான் என்றால், அதற்காக அவன் கானகம் ஏகுவது இன்றிமையாதது ஆகிறது. அவன் கானகம் செல்லும் பொருட்டுக் கைகேயியின சிந்தை திரிந்தது. அவள் சிந்தை திரிய மந்தரை ஒரு கருவியாகிறாள், கருவியை விதி இயக்கியது.

உலகம் அழியும்வரை தொல்புகழ் இராமனின் பெருமைகளை மக்கள் தெவிட்டாத அமுதெனப் பருகுவதற்குப் பெருவாய்ப்பு உண்டானது மந்தரை என்னும் பாத்திரத்தினுல்தானே? அங்ஙனமிருக்க, மந்தரையை நினைந்தால் ஏன் முகம் சுளிக்கவேண்டும்?

இராமகாதைக்கு மூல மந்திரமாய் விளங்கிய சிறந்த பாத்திரம் மந்தரை. காலங்கடந்து நிற்கும் காவியத்தை வான்மீகிக்கும் கம்பனுக்கும் ஆக்கித் தந்தவள் மந்தரை.

கதையில் அவள் ஒரு திருப்பு மையம்.

அவள் பெயர் நின்று நிலைத்து விளங்கத் தக்கதாகும்.

அமைந்த பாதை ★★

கே. சி. கிருஷ்ணன்

1

கிட்கிந்தை நகரத்தின் அரண்மனைக்கு வெளியில், அந்தப்புரத்துக்கு நேர் எதிரில், அந்த ஆரவாரக் குரல் ஒலித்தது.

சாளரத்தின் வழியே தாரை தன் பார்வையைச் செலுத்தினுள். மெல்ல விலகிக்கொண்டிருந்த வைகறைக் கருக்கிருளில் அந்த உருவம் நிழலாகத் தெரிந்தது.

தூங்குபவனைப்போல் அமைதியாகப் பஞ்சணையில் படுத்திருந்த வாலியை உலுக்கினுள் தாரை.

வாலி மெல்லக் கண் திறந்து அவளைப் பார்த்தான். அவன் பார்வையில், அலையையும் ஆழத்தையும் உள்ளடக்கிய நடுக்கடலின் அமைதி இருந்தது.

எழுந்து உட்கார்ந்தான்; நீண்ட பெருமூச்சு விட்டான். தாரை அவனையே கலவரத்துடன் பார்த்துக்கொண்டிருந்தாள்; 'அங்கே வெளியிலிருந்து வரும் ஆர்பாட்டத்தைக் கேட்டீர்களா?' என்று கண்ணுல் பேசிக் கையால் குறிப்புக் காட்டினுள்.

அந்தக் கொக்கரிப்பு முன்னிலும் மேலோங்கிக் கேட்டது: "உனக்கு வீரம் இருந்தால், ஆண்மை இருந்தால்...... இருந்தால்...... இருந்தால் ..."

தாரை காதுகளைப் பொத்திக்கொண்டாள்.

"அந்தப்புரத்தில் மூன்ருணையில் முகத்தை மூடிக்கொண்டு.. கிடப்பவனே! போர் முகத்தில் சந்திப்போம்; வெளியில் வா."

தாரைக்குக் குமட்டிக்கொண்டு வந்தது.

வாலி சிரித்தான்; "வருகிறேன்" என்று அடங்கிய குரலில், தனக்கு அறைகூவல் விடுத்தவனுடன் பாவனையாகப் பேசினுன்.

மஞ்சத்தை விட்டு இறங்கினுன்.

வெளியிலிருந்து 'வீர வசனம்' அவனைக் கூப்பிட்டுக் கொண்டேயிருந்தது. வெண்மையான அவன் முகத்திலும் மேனியிலும் செந்நிறம் வேகமாகப் பரவியது.

தாரை அவன் நெடுங்கரத்தைப் பற்றித் தடுத்தாள்; "போகாதீர்கள்" என்று கெஞ்சினுள்.

வாலி வியப்போடு அவளைப் பார்த்தான்.

" என் தம்பி வேண்டுமென்றே என்னைச் சீண்டுகிறான்; உசுப்புகிறான்."

" அதனால்தான் தடுக்கிறேன். அங்கே உங்கள் தம்பிக்கு இராமன் என்பவன் துணை வந்திருக்கிறானாம். அதனால்தான் இந்தத் துணிச்சல் ஆர்ப்பாட்டம் எல்லாம்."

வாலி சில வினாடிகள் அசைவற்று நின்றான்.

' இராமனா? அயோத்தி இராமனா ?...இராமா! நீ எப்போது வந்தாய்?......ஏன் வழி தவறி அப்பக்கம் போனாய்?......உனக்காக நான் எவ்வளவோ செய்யக் காத்திருக்கிறேனே!......'

அவன் சினமெல்லாம் வந்த சுவடு தெரியாமல் போய்விட்டது.

" இராமன் வரவால் இந்தக் கிட்கிந்தை பவித்திரம் அடைந்தது......தாரை! உண்மையாகவே இராமன் வந்திருக்கிறானா?...... இந்த நாட்டை ஆளும் அரசன் நான் — எனக்குத் தெரியாமல் உனக்குத் தெரிந்திருக்கிறதே! நீ பாக்கியசாலி......உனக்கு யார் சொன்னார்கள் ?"

தாரை திகைத்தாள். ' நான் கேட்டதெல்லாம் பொய்யோ ?... பொய்யாக இருந்தால் — எவ்வளவு நன்றாக இருக்கும்!......'

மகிழ்ச்சியால் மனம் நிரம்பிய வாலி அவளைத் தூக்கிப் போட்டுப் பிடித்தான்; அவள் கன்னத்தைக் கிள்ளினான்; அதரம் பருகினான்; இளமைக் குறும்புகள் செய்தான். வெளி இரைச்சல் அவன் காதில் விழவேயில்லை. தாரையைத் தன் நெஞ்சோடு சேர்த்துக்கொண்டான்.

" தாரை! நீ இராமனைப்பற்றி அறியமாட்டாய். அவன் பரதனின் அண்ணன். பரதன் யார் தெரியுமா? தாயின் வழியாகத் தனக்குக் கிடைத்த நாட்டைத் தீய வினையென நீத்தவன். தம்பியே அப்படியென்றால், அண்ணன் எப்படியிருப்பான்?......அந்த உத்தமனுக்குக் கடைமகன் இராவணன் தீங்கிழைத்துவிட்டான் — சித்தர்கள் சொன்னார்கள்; இராமனுக்கு உதவும்படியும் என்னைக் கேட்டுக்கொண்டார்கள்......"

தாரை ஒரு விதமான மயக்க நிலையில் கேட்டுக்கொண்டிருந்தாள்.

" தாரை! இராவணனுக்கு மறுபடியும் நான் பேய் ஓட்ட வேண்டும். எத்தனை முறை பட்டாலும் அவன் திருந்தமாட்டான். ......இராமா! பஞ்சவடியிலிருந்து நீ நேராகக் கிட்கிந்தைக்கு என்னிடம் வராமல், கோணல்மாணலான குழம்பிய பாதையில், உருசியமுக மலைக்கு ஏன் போனாய்?......"

“ கவந்தன் தான் போகச் சொன்னவன் ; வழி காட்டியவள் சவரி” என்றாள் தாரை.

வாலி பற்களை நறநறவென்று மென்றான். “ கவந்தா ! வயிற்றில் பல் முளைத்தவனே ! உன் வேலைதானா அது ?......முன்பு என் தம்பியைக் குடிகாரனுக்கிக் கெடுத்தாய்....இப்போது இராமனின் பாதையை மறித்து மாற்றியிருக்கிறாய்......நீ மறுபடியும் என் கண்ணில் பட்டால், முன்புபோல் உதைத்துத் துரத்தமாட்டேன் ; உயிரையே வாங்குவேன்......”—அவன் ஆத்திரம், அழுந்திய பெருமூச்சாகிக் காற்றில் கலந்தது ; “ சவரி என்ன செய்வாள் — கேட்ட இடத்திற்கு வழி காட்டியிருக்கிறாள்......”

கவந்தன் மாய்ந்ததையும், சவரி முத்தி அடைந்ததையும் தான் அறிந்தபடி வாலிக்கு விளக்கிக் கூறினாள் தாரை.

“ எனக்கு எதுவும் தெரியாதே !” என்று வியந்தான் வாலி.

“ ஒற்றர்கள் அறிந்து வந்து சொன்ன செய்தியாம்—அங்கதன் சொன்னான்....நீங்கள்தாம் அகத்தியரையும் சித்தர்களையும் பார்த்துவிட்டு வருவதாகப் போயிருந்தீர்களே ; இரவுதானே வந்தீர்கள் !..... வந்தவுடன் இதையெல்லாம் உங்கள் சிந்தையில் திணிக்கக்கூடாது என்று பொறுத்திருந்தேன்......”

தன் மேனியில் கொடியாய்ப் படர்ந்திருந்தவளைக் காற்றும் இடையில் புகாமல தழுவியபடி, “ அறிவே ! அன்பே ! ஆருயிரே !” என்று குழறிப் பாராட்டினான் வாலி ; அவள் அலைக் கூந்தலை அளைந்தான்......

வெளியிலிருந்து வாலியைப் போருக்கு அழைத்த குரல், ஓயாமல் கரகரத்துக் கம்மி ஒலித்தவண்ணம் இருந்தது. அந்தக் குரலில் விரவி வெளிப்பட்ட கள்ளின் நாற்றமும் சொல்லின் ஆபாசமும் காற்றை அசுத்தப்படுத்தின.

“ பாவம் ; என் தம்பிக்குக் கத்திக்கத்தி நாக்கு வரண்டு விட்டது ” என்றபடி தாரையிடம் விடை கேட்டான் வாலி.

அவள் கலங்கிய கண்கள் அவனை வெளியில் அனுப்ப மறுத்தன. ஆயினும், செருமுகத்தைக் காணப் புறப்படும் போர் யானையைப் போல் வெளியில் வந்தான் வாலி.

எங்கிருந்தோ ஒரு குயில் தீனக்குரலில் அழுதது.

2

போர் மூண்டுவிட்டது.

தன்னை நேரில் பார்த்ததும் சுக்கிரீவன் அடங்கிவிடுவான் என்று வாலி நினைத்தது தவறாயிற்று.

தாரை கூறிய சுக்கிரீவனின் 'பக்கபலம்' எதுவும் அவன் கண்ணுக்குத் தெரியவில்லை. 'அது' புதர் மறைவில், மரம் மறைவில் நின்று கோதண்டத்தில் நாண் ஏற்றிக்கொண்டிருந்தது.

பக்கத்தில் இலக்குவன் தலைகுனிந்து நின்றிருந்தான்.

அனுமன் சஞ்சலத்தோடு, எதிரில் பொட்டல் வெளியில் நிகழ்ந்துகொண்டிருந்த யுத்தத்தைக் காற்றலைவில் மூடிமூடித் திறந்த இலைதழைகளின் இடைவெளியில் உற்று உற்றுப் பார்த்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தான்......

இரண்டு வெள்ளைக் காளைகள் ஒன்றோடு ஒன்று முட்டிக்கொண்டு அதிர்ந்தன; சாய்ந்தன; உருண்டு புரண்டு எழுந்தன; மோதின.

சுக்கிரீவனின் வாய் ஓயாமல் பொழிந்த வசை மழையில், வாலியின் நிதானமும் பரிவும் சிறுகச் சிறுகக் கரைந்து கொண்டிருந்தன......

இலக்குவன் இராமனிடம் ஆற்றாமையோடு கூறினான்: "அண்ணா! வாலி நமக்கு ஒரு தீங்கும் செய்ததில்லையே!"

இராமன் அவனை வியப்போடு பார்த்தான்; புன்னகை புரிந்தான். "தாடகை நம்மை என்ன செய்தாள்?... சுபாகுவும் நமக்கு ஒரு தீங்கும் செய்ததில்லையே!"

அனுமன் சண்டை நடந்த இடத்தைப் பார்த்துத் தவித்துக் கொண்டிருந்தான்...

இரண்டு ஆட்டுக்கிடாக்கள் கொலைவெறியோடு முட்டிமோதி மண்டையை உடைத்துக் கொண்டிருந்தன...

"தம்பி! சுக்கிரீவனுக்கு நாம் வாக்குக் கொடுத்துவிட்டோம். அவன் நம்மை நம்பி வாலியை வலிந்து போருக்கு அழைத்துவிட்டான்... இனித் தயக்கம் காட்டுவதும், துணிந்தபின் எண்ணுவதும் இழுக்கில்லையா?..."

'இழுக்கு இனிமேல்தான் வரப்போகிறது' - இலக்குவன் பெருமூச்சு விட்டான்; "அந்தக் கவந்தன் நம்மைப் பழி வாங்கிவிட்டான். நாம் வந்த பாதையே சரியில்லையென்று தோன்றுகிறது" என்று முணுமுணுத்தான்; "இந்தப் பயல் தன் உடன்பிறப்பை ஒழிக்க உன்னைக் காலனாக்கினான். இவனுடன் உடன்படிக்கை செய்துகொண்டு நம் நிலையில் தாழ்ந்துவிட்டோம்."

இராமன் புன்னகை மாறாமல் கூறினான்: "பின்பிறந்தவனெல்லாம் நம் தம்பி பரதனாகி விடுவானா? அப்புறம் பரதனுக்குப் பெருமை ஏது? ஒருவனிடம் சேர்ந்திருக்கும் நன்மையைக் கருதித் தீமையைப் பொறுத்துக்கொள்ள வேண்டியதுதான்."

" சுக்கிரீவனிடம் நன்மையா ? அவனிடம் அப்படி எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை " என்று கசப்போடு கூறினான் இலக்குவன்.

" இதோ, இந்த நன்மையைக் கூறினேன் " என்று, தன் அருகில் நின்றிருந்த அனுமனைக் காட்டினான் இராமன்.

அனுமனின் பார்வை, போர் நிகழ்ந்த இடத்தில் நிலைகுத்தி யிருந்தது...

வாலியும் சுக்கிரீவனும் அடித்துக்கொண்டனர்; கடித்துக் கொண்டனர்; விழுந்து எழுந்து சுழன்று, உதைத்துக்கொண்டு, கட்டிப்புரண்டு, பிறாண்டி குமைத்துக்கொண்டனர்.

சுக்கிரீவனின் வலிமை ஒடுங்க ஒடுங்க அவன் வாய்ச்சொல் ஓங்கிற்று. இருவரும் ஒரு தாய் மக்கள் என்பதை மறந்து அவன் வாலியின் பிறப்பையே இழித்துரைத்தான்.

வாலி சிலிர்த்துக்கொண்டான். அவன் உடம்பெங்கும் மின்சாரம் பாய்ந்தது. மயிர்க்கால்கள் நிமிர்ந்தன.

தன் வலிய கைகளால் சுக்கிரீவனைத் தலைகீழாகத் தூக்கினான்; அவன் மண்டையைத் தரையில் துவைக்க, " இன்றுடன் ஒழிந்து போ !" என்று மேலே ஓங்கினான்.

" ஐயோ, நான் செத்தேன் !" என்று சுக்கிரீவன் அலறி ஊளையிட்டான்.. ...

இராம பாணம் என்றுமே இலக்குத் தப்பியதில்லை; இப்-போதும் வைத்த குறி பிசகாமல் பாய்ந்து வந்து வாலியின் மருமத்-தில் தைத்தது.

வாலியின் கரங்கள் செயல் குன்றித் தொய்வுற்று மெல்ல மெல்லச் சுக்கிரீவனைத் தரையில் இறக்கின.

3

வாலியின் வினாக்கள் இராமனை மனம் குலைய வைத்தன. " இராமா ! உனக்கு நான் என்ன தீங்கு செய்தேன் ? ... ... நான் உனக்கு எப்படிப் பகையானேன் ? ... ... 'இராவணன் சீதையைக் கவர்ந்து சென்றால் வாலியைக் கொல்ல வேண்டும்' என்று மனுநீதி கூறுகிறதா ? ... ... உனக்கு ஒரு பாவமும் நினைக்காமல் நன்மையே நினைத்த எனக்கு நீ வழங்கிய தீர்ப்பு இதுவென்றால், உன் அறிவையே கலக்கி இந்த இழிநிலைக்கு உன்னைக் கொணர்ந்த இராவணனுக்கு நீ வழங்கும் தீர்ப்பு இதற்கு நேர்மாறாக இருக்குமா ? ... ... 'உலகில் ஓங்கிய இரு குலங்களின் முதல்வரில் ஒருவனான

சூரியனுக்கு மட்டும் களங்கம் இல்லாமலிருப்பது சரியில்லை' யென்று எண்ணி உன் மரபுக்குக் களங்கம் உண்டாக்கினுயா? ... .. இராமா! உன் நற்பண்புகள் இன்னின்னவையென்று பட்டியல் போட்டுக் கொண்டாடுவோர், உன் இந்தச் செயலுக்கும் ஒரு காரணம் கூறி மகிழ்வார்களா? ... ..."

வாலியின் மருமத்தில் அறுபட்டுச் சிதைந்த நாளங்கள், அம்பு பெயர்த்து உண்டான துளை வழியாய்ச் செந்நீரை அருவியாய்ப் பீய்ச்சியடித்தன.

"இராமா! நீ பரதனுக்கு மூத்தவன்; தயரதனின் தவப் புதல்வன். இவை உனக்குரிய தகுதிகள் என்ருலும், ஒரு வழக்கில் இருவர் முறையிட்டையும் செவிமடுக்காமல் ஒருவன் கூறியதைக் கேட்டு மற்றவனுக்குத் தண்டனை வழங்கலாமா? ... ... இன்று நீ வாலியையா அழித்தாய்? அரச தருமத்தின் வேலியையே அழித்தாய் ... ..."

தரையில் வீழ்ந்து கிடந்தவனின் கண்களின் ஒளியில் இலேசாகத் திரை படரத் தொடங்கிற்று. கொட்டிய குருதியின் வேகம் குறைந்து நாடித் துடிப்பு ஓய்ந்துகொண்டிருந்தது.

"இராமா! நீயும் இராவணனும் பெண்ணின் பேச்சைக் கேட்டுக் கெட்டீர்கள்; நான் கேளாததால் கெட்டேன்."

வாலிமீது தான் வாளி தொடுத்ததற்கான நியாயத்தை உடனே கூறவில்லையென்ருல், பின்னர் அவனிடம் கூறவே முடியா மற்போகும் என்பதை இராமன் நன்ருகப் புரிந்து கொண்டு, மேலும் தாமதியாமல் கூறத் தொடங்கினுன்:

"வீரனே! அன்று மாயாவியைத் துரத்திக்கொண்டு பிலத்தினுள் நுழைந்த நீ நெடும்பொழுதாகியும் மீளவில்லை. சுக்கிரீவன், நீ இறந்துவிட்டதாக அஞ்சினுன்; அதனுல் பிலத்தின் வாயை அடைத்துவிட்டுக் கிட்கிந்தைக்குத் திரும்பினுன். உன் வலிமையை அறியாமல் அவன் செய்த தவறு அது. முடி சூட்டிக்கொண்டு நாட்டை ஆளும்படி அமைச்சர் பிரதானியர் அவனை வற்புறுத்தினர். அவன் அவ்வாறே செய்தான். பின்னர் நீ உயிருடன் திரும்பினுய். தம்பி உன் வரவை ஏற்ருன்; தன்னை மன்னிக்கும்படியும் நாட்டாட்சியை ஏற்றுக்கொள்ளும்படியும் வேண்டினுன்; உன் சினத்தை ஆற்ற உன் காலைப் பிடித்துக்கொண்டு கெஞ்சினுன். நீ அவனை மன்னிக்கவேயில்லை; விரட்டியடித்தாய் ..."

"ஆமாம்; என் தம்பி — என்னுல் வளர்க்கப்பட்டவன். அவன்மீது பாசத்தைப் பொழிந்தேன்; சினம் வந்தபோது அடித்து விரட்டினேன் ... ... அதற்கு நான் உரிமையுள்ளவன்."

இராமன் பொறுமையாகக் கூறினுன் : "உன் உரிமை அவன் மனைவி உருமையை நீ பெண்டாக்கிக் கொள்ளும் அளவுக்கு நீண்டுவிட்டது."

"ஓ! ... ..."

வாலியின் குவிந்த வாய் நெடுநேரம் அப்படியே இருந்தது.

தன் எதிரில் குற்றவுணர்வோடு தலை குனிந்து அழுதபடி நின்றிருந்த தம்பியை நோக்கினுன்.

அழுதான்.

தனக்கு நேர்ந்த இந்த முடிவுக்குக் காரணம், தன் உள்ளத்தில் மூண்ட சினம் என்னும் அகப்பகையைத் தவிர வேறு எதுவும் இல்லை என்பது அவனுக்குப் புரிந்தது.

'சினம் உறவைக் கொல்லும் ; முடிவில் தன்னைக் கொண்டவனையே கொல்லும். சினத்தை ஒரு செல்வமெனக் கொண்டவன் வாழ்ந்ததில்லை.'

அவன் பெருமூச்சு விட்டான். கண்ணில் பெருகிய நீரைக் கையால் துடைத்துக்கொள்ளவும் வலிமையின்றிக் கிடந்தான் ...

"இராமா ! ... ... மறைந்திருந்து என்மீது அம்பு எய்தாயே ; அது ஏன் ? ... ... 'மிருக வேட்டை' என்று நினைத்தாயா ? ... ... போர் நெறி உனக்குத் தெரியாதா ? ... ... "

அவன் குரல் மிகவும் ஒடுங்கியிருந்தது.

இலக்குவன் வாய் திறந்தான் :

"உன் முகத்தெதிரில் வந்திருந்தால், நீயும் எங்கள் நட்பை நாடியிருப்பாய் ; உன்னைக்கொன்று உருமையையும் கிட்கிந்தையையும் மீட்டுத் தருவதாக நாங்கள் சுக்கிரீவனுக்குத் தந்த வாக்குறுதியில் குறை நேர்ந்திருக்கும்."

"வாக்குறுதி ..." என்று இளிவோடு மெல்லச் சிரித்தான் வாலி.

ஆயினும், இந்த நிலைமைக்கு மூல காரணம் என்ன என்பதை மீண்டும் அவன் நினைவு கூர்ந்தான்.

சினம் ; சினமேதான்.

'சினம், தன்னைக் கொண்டவனை அறம் நாடிவர வழிவிடாது. அறத்தின் பாதையை அது மறித்து மாற்றிவிடும் ... ... அறத்தைத் தவருன முடிவெடுக்க வைக்கும் ... ... பின்னர் அந்த அறத்தை அசட்டுத் தனமாக வாதிடவும் வைக்கும் ... "

வாலியின் இதயம் சீர் கெட்டுத் துடித்தது ; மூச்சுத் திணறியது. மரணத்தின் கோரக் கரங்கள் அவன் குரல்வளையை அழுத்தின. நேரம் நெருங்கிக்கொண்டிருப்பதை அவன் நன்கு உணர்ந்தான்......

அங்கதன் அவன்மேல் விழுந்து கதறினான்.

அவனை அணைத்துக்கொள்ள இயலாமல் வாலியின் கரங்கள் துவண்டு கிடந்தன.....

"இராமா!... இப்போது எனக்கு யார்மீதும் வருத்தமில்லை... உடன் பிறந்தே கொல்லும் வியாதியாய் என்னிடம் பொருந்தியிருந்த சினமே எனக்கு எமனாயிற்று..."

அவன் திணறித் திணறி நாக்குழறிப் பேசினான்:

"இராமா! என் தம்பி இயல்பில் நல்லவன். ஆனால் களி மயக்கிலும் பிற போகங்களிலும் ஆடிப் புதைந்து போவான்; கடமையை மறப்பான்... தாரை அவனை நெறிப்படுத்தி உனக்கு உதவச் செய்வாள். நீயும், யாரும் அவனை இகழாதபடி நல்வழிப்படுத்தி உனக்குரிய வனாக்கிக்கொள்... அனுமன் உத்தமன்; நீ சீதையை மீட்க உனக்கு ஒல்லும் வகையில் எல்லாம் உதவுவான். ...இதோ அங்கதன் - என் மைந்தன்; பெருவீரன் - உன் அடைக்கலம்."

இராமன் கண் கலங்கினான்.

தன் கூர் வாளினை அங்கதனிடம் கொடுத்தான்; அவனை நோக்கினான்.

இருவரும் கண்களால் உரையாடினர்.

'இந்த வாள் இனி உனக்குரியது; உனக்குத் தோன்றியதைச் செய்' என்றன இராமனின் கண்கள்.

'நம்பியவர்களின் கழுத்தை அறுத்து எங்களுக்குப் பழக்கமில்லை' என்று சுக்கிரீவனின் விழிகள் மறுமொழி கூறின.

இராமன் அவனைத் தழுவிக்கொண்டான். "நீ என்னை மன்னித்துவிட்டாய்."

வாலி என்ற மாவீரனை மரணம் தழுவியது......

விரைந்தோடி வந்த தாரை, பிணம் என்று பேர் கொண்ட வெறுங் கூட்டின்மீது விழ்ந்து கதறினாள்.....

கிட்கிந்தை இரவென்னும் இருளைக் கரிய ஆடையாகப் போர்த்திக்கொண்டது.

4

படிந்துவிட்ட கறையைக் கழுவ முயல்வதுபோல் கார் காலம் ஓயாமல் மழை பொழிந்தது......

அந்தப்புரத்தில் சுக்கிரீவன் மயக்கத்திலும் முயக்கத்திலும் கிடந்தான்.

உருமை ஊடியும் கூடியும் அவனைத் தணித்து ஆற்றுப்படுத்தினாள்.

தன்னையும் அவனையும் சினங்கொண்டு பிரித்ததைத் தவிர வேறு எந்தப் பாவமும் வாலி செய்ததில்லை என்று அவனிடம் அவள் கூறியபோது, "நான் அப்போதே நினைத்தேன்" என்று அவன் குமுறினான்.

"பின் இராமனிடம் ஏன் தவருகக் கூறினீர்?" என்றபோது, அப்போது அப்படி நினைத்தேன்" என்று உளறினான்......

கிட்கிந்தை நாடாவளம் தருவதாய்ப் பிணியின்மை முதலான ஐவகை அணிகளும் கொண்டிருந்தது. அரசருள் ஆண் சிங்கம் போன்ற வாலி, படை குடி உணவு அமைச்சு நட்பு அரண் என்று ஆறு அங்கங்களும் சீராக அமைத்து நிரம்பினவனுய் ஆண்ட நாடு அது. இப்போது அந்த நாட்டை வலிதில் கொண்ட சுக்கிரீவன் 'நன்ருக' ஆண்டு அனுபவித்தான்.

அந்தப்புரத்தில் பள்ளியறையில் வாலெயிறு ஊறிய நீரையும், பாளையில் வடிந்த மதுவையும் மாறி மாறிச் சுவைத்துப் பருகிச் சுகித்துக் கிடந்தான்......

கார்ப்பருவம் கழிந்து மழை ஓய்ந்து விட்டதையும், குளிர் காலம் தொடங்கி வாடைக்காற்று வீசுவதையும் அவனுக்குச் சொல்லும் முறைமையில் சொல்லித் தெளிவு படுத்தப் புயலின் சீற்றத்தோடு இலக்குவன் விரைந்து வந்தான்.

முதலில் அவன் கண்ணுக்குத் தாரை எதிர்ப்பட்டாள்.

அவள் கோலம், தன் அன்னையரை அவனுக்கு நினைவு படுத்திற்று.

அவன் சினம் தணிந்துவிட்டது.

கண் கலங்கினான்.

"அம்மா!" என்று தழுதழுத்தான்.

துன்பமுற்ற தாயின் முன் பரிவு மிக்க ஒரு தனயனுய் அவளைப் பாசத்தோடு பார்த்தான்.

"மன்னித்துக்கொள் தாயே!"

அவள் அவனைத் தாயின் கருணையோடு பார்த்தாள்.

"இந்த நிலை நேரிடக் காரணமானவனைப் பழிவாங்க வந்திருக்கிறேன். நாங்கள் செய்த பாவத்துக்குக் கழுவாய் அதுதான்."

தாரை வரட்சியோடு புன்னகை புரிந்தாள்.

"நேர்ந்துவிட்ட ஒரு தவற்றுக்கு மற்றொரு தவறு கழுவாய் ஆகுமா?"

அவன் தலை குனிந்து நின்றான்.

"ஐயா! நான் யாரையும் நோகவில்லை. யார் மீதும் எனக்குக் கோபமில்லை...... அப்படி ஒரு பாதை உங்களுக்கு அமைந்துவிட்டது."

அவள் பாதங்களில் தன் கண்ணீரைக் காணிக்கையாக்க அவன் நெஞ்சம் துடித்தது.

5

சுக்கிரீவனின் போதை, இலக்குவனின் வரவை அறிந்ததுமே தெளிந்துவிட்டது.

தாரையும் அவனுக்குத் தாயைப்போல் அறிவுரை கூறினாள்.

அவன் நாற்புறமும் படைகளை ஏவினான்...

தென்றிசையில் போனவர்கள் சம்பாதியைச் சந்தித்தனர்...

அனுமன் கடல் கடந்து சென்று, சீதையைக் கண்டு, சூடாமணியுடன் திரும்பி வந்து, இராமனுக்குத் தெரிவித்து —

இலங்கைச் செலவு கூடிவிட்டது.

தாரை வாழ்த்தி வழியனுப்பினாள்.

அங்கதனை உச்சி மோந்து முத்தமிட்டாள்.

அவள் உடம்பு நெருப்பாய்த் தகித்தது ; சன்னிக் காய்ச்சல்!

அங்கதன் அவள் முகம் பார்த்து அழுதான்.

அவன் கண்ணீரை அவள் துடைத்தாள்.

"போய் வா மகனே!... இராமனும் சீதையுமே இனி உனக்குத் தாயும் தந்தையும்... போய் வா."

6

தாரை கிட்கிந்தை மலையின் உச்சியில் ஏறி நின்றாள் ; வீரர்கள் அணிவகுத்துச் செல்லும் அழகை நெடுநேரம் பார்த்துக் கொண்டிருந்தாள் ...

மலையின் அடிவாரத்தில் காறாறு ஆழ்ந்தும் அகன்றும் கம்பனின் காவியம்போல் பெருகிப் பிரவகித்து ஓடிக்கொண்டிருந்தது.

தாரை குனிந்து பார்த்தாள்.

கணவன் தன்னைக் கைநீட்டி அழைப்பதைப்போல் உணர்ந்து புன்னகை புரிந்தாள்.

"இதோ வருகிறேன்."

அருவியைப்போல் இழிந்து ஆற்றில் சங்கமித்தாள் தாரை.

★★

நன்றியுரை

சென்ற மூன்று ஆண்டுகளில் செய்தது போலவே, இந்த ஆண்டிலும் கம்பன் விழாவைச் சிறப்பாக அமைப்பதற்குத் திருப்பத்தூர் நகரிலும் சுற்றுப்புறச் சிற்றூர்களிலும் வாழும் பெருமக்களும் சான்றோர்களும் உறுப்பினராகச் சேர்ந்து ஊக்கமளித்துள்ளனர்; புரவலராக நின்று துணை புரிந்துள்ளனர்.

வணிகப் பெருமக்களும், தொழில் துறையினரும் விளம்பரங்களைப் பெருமளவில் வழங்கி இம்மலர்க்கு ஆணிவேராய் அமைந்து ஆக்கம் செய்துள்ளனர்.

கம்பன் காவியத்தில் திளைக்கும் தமிழறிஞர்களும், கவிஞர்களும் இந்த விழாவுக்கு வருகைதந்து பங்கேற்றுச் சிறப்பித்துள்ளனர்.

மலரின் மணம் கமழத் திரு. கா. அ. ச. ரகுநாயகன், திரு. M. துரைசாமி, திரு. சு. சண்முகசுந்தரம், திரு. கே. சி. கிருஷ்ணன் ஆகியோர் தங்கள் ஆய்வுக் கட்டுரைகளை அளித்து அணி செய்துள்ளனர்.

விழா மலரும் விழாவும் சிறப்பாக அமையத் தமிழக ஆளுநர் மேதகு பிரபுதாஸ் பட்வாரி அவர்களும், செட்டிநாட்டரசர் ராஜா சர் M. A. முத்தையா செட்டியார் அவர்களும் அருளோடு வாழ்த்தியுள்ளனர்.

கரகவனப்பல்லி திருமதி K. V. பாப்பு அம்மாள் அவர்கள் விழாவில் பங்கேற்கும் அறிஞர் பெருமக்கள் அனைவர்க்கும் கதராடை போர்த்திச் சிறப்புச் செய்வதற்கெனப் பொருள் வழங்கியுள்ளார்கள்.

விழாவிற்கு வருகைதரும் விருந்தினர்கள் வசதியாகத் தங்கி மகிழ்வதற்குத் திருமதி ஆண்டாள் தாமோதரன் அவர்கள் தங்கள் திருமண மண்டபத்தைக் கொடுத்து உதவியுள்ளார்கள்.

திரு. K. A. S. பத்மநாபன், திரு. V. R. மாரிமுத்துச் செட்டியார், திரு. C. K. D. திருநாராயணன், திரு. T. P. தங்கவேலு, திரு. T. B. கோவிந்தராஜன் ஆகியோர் இரு நாளிலும், ஒவ்வொரு வேளைக்கு ஒருவராய்ப் பொறுப்பேற்று, விழாவுக்கு வருகைதரும் பெருமக்களுக்கு மகிழ்வுடன் அறுசுவை விருந்தளிக்கப் பெருமனம் கொண்டனர்.

இந்த விழா நடப்பதற்கு இடத்தையும், பிற வசதிகளையும் இராமகிருஷ்ண கல்விச் சங்கத்தினர் அளித்து உதவினர்.

விழா நடைபெறும் அரங்கத்தைப் பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தினர் கொடுத்து உதவினர். விழாவின்போது இராமகிருஷ்ண மேல்நிலைப் பள்ளியின் ஆசிரியர்கள், சாரணர்கள், அலுவலகப் பணியாளர்கள் அனைவரும் செய்யும் உதவிகள் பலப்பலவாகும்.

தருமபுரி பாரி அச்சகத்தினர் சுவரொட்டி, அழைப்பிதழ்கள், விழா மலர் முதலானவற்றை மிக நல்ல முறையில் கலையழகுடன் அச்சிட்டு உரிய நேரத்தில் தந்து உதவினர்.

திருப்பத்தூர் T. R. S. சவுண்ட் சர்விஸ் உரிமையாளர் திரு. சுப்பிரமணியன் அவர்கள் விழா அரங்கையும், வரவேற்பு வளைவுகளையும் அழகாக அமைத்து மின் விளக்குகளால் அலங்காரம் செய்துள்ளார். ஒளியோடு ஒலி அமைப்பும் அவருடையதே.

இவர்கள் அனைவர்க்கும் விழாக் குழுவினர் நெஞ்சு நிறைந்த நன்றியைக் கூறுகின்றோம். இங்குச் சொல்லாமல் விடுபட்டுப் போகும் நண்பர்களுக்கும் எங்கள் நன்றி உரியதாகும். எல்லாவற்றையும் இயக்கித் தண்ணருள் புரியும் இறைவன் திருவடிகளுக்கு எங்கள் நன்றி கலந்த வணக்கத்தைச் செலுத்துகிறோம்.

திருப்பத்தூர், வ. ஆ.
19—7—80

விழாக் குழுவினர்
கம்பன் கழகம்